# சீர்காழி நகராட்சி



## 2023–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30– ஆம் தேதி நாள்.30.08.2023 புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டம் நடவடிக்கை.

திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,
நகர்மன்ற தலைவர்,
சீர்காழி நகராட்சி.

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | சீர்காழி நகராட்சியில் 15வது நிதிக்குழு மானிய திட்டம் (Tied Grant)–2022–2023 ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான 5–எண்ணிக்கை இலகுரக வாகனம் (LCV) Vee Vee Motors, 408/13, நாகை புறவழி சாலை, திருவாரூர் என்ற நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே வாகனங்களை திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இயக்க வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உரிய அனுமதி பெற்று தர மேற்படி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியலில் உள்ளவாறு ஒரு வாகனத்திற்கு **ரூ.52,778/–**வீதம் 5 எண்ணிக்கைக்கு **ரூ.2,63,890/–** ஐ பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்ற நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:750/2023 / இ1. | தீர்மான எண்-990<br>நாள்.30.08.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-2 | இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் வருகை பதிவு மற்றும் DBC பணியாளர்களின் வருகையை வருகைபதிவு இயந்திரம் (Bio-Metric) மூலம் செயல்படுத்திடவும் மற்றும் தினசரி பொதுமக்களுக்கு உணவு வழங்கிட வினியோகிக்கப்படும் டோக்கன்களை பெறுவதி ஏற்படும் காலதாமதங்களை தவிற்க ரசீது இயந்திரம் மூலம் செயல்படுத்திடவும் Bio-Metric – 2 எண்ணிக்கை மற்றும் ரசீது இயந்திரம் 1 எண்ணிக்கை கொள்முதல் செய்திட ஆகும் செலவீனம் **ரூ.70,000/–** த்திற்கு விலைப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் இச்செலவீனத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 5415/2015/அ1 | தீர்மான எண்-991<br>நாள்.30.08.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்-3 | சீர்காழி நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவு, பொதுப்பிரிவு மற்றும் பொறியியல்பிரிவு கணினி உதவியாளர்கள் 3 நபர்கள் மற்றும் ஆணையர், பொறியாளர் மற்றும் LCV வாகனத்தை இயக்குவதற்கு 3 ஓட்டுநர்கள் (டெண்டர்) ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஒப்பந்த நிறுவனம் மூலம் பணியமர்த்தவும் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3391/2023/ஈ1 நாள்.09.06.2023ஆம் தேதிய உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள, விலை விகிதமான நாள் ஒன்றுக்கு ரூ.600/-வீதம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் (EPF-13%) நாள் ஒன்றுக்கு ரூ.678ஆகும். மேலும் பணிகள் மேற்கொள்ள 6 நபர்களுக்கு ஒரு மாத கால ஊதியம் **ரூ.1,22,040/-**ஆகும்.<br>எனவே தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் 01.09.2023 முதல் 31.03.2024 வரையிலான 7மாதங்களுக்கு உத்தேச செலவின தொகை **ரூ.8,54,280/-** ஆகும். எனவே அவசர அவசியம் கருதி ஒப்பந்தபுள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் செலவீனத்தொகை நகராட்சி பொதுநிதியிலிருந்து 2023-2024ன் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. மேலும் ஒப்பந்தபுள்ளி கோரும் வரை ஏற்கனவே உள்ள ஸ்ரீ பைரவர் மகளிர் சிறப்பு சுய உதவி குழு மூலம் பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் செலவீனத்தொகை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2670/2020/எச்1 | தீர்மான எண்-992<br>நாள்.30.08.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-4 | சீர்காழி நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர், மற்றும் மாவட்ட சுகாதார நலப்பணிகள் இணை இயக்குநர் மயிலாடுதுறை ஆகிய உயர் அலுவலர்களுக்கு தினந்தோறும் தற்காலிக DBC பணியாளர்களால் கொசு புழுக்கள் அழித்தல், முதிர் கொசுக்களை அழித்தல் போன்ற பணிகளில் ஈடுபடும் DBC (Domestic Breeding Checkers) பணியாளர்கள் மற்றும் பணியின் விவரத்தை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து தெரிவிக்க வேண்டியுள்ளது.<br>எனவே எதிர்வரும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக நகராட்சியில் 32 டெங்கு களப்பணியாளர்கள் நோய் தடுப்பு பணிக்காக அமர்த்தி 01.09.2023 முதல் 29.02.2024 வரை 6 மாதங்களுக்கு டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளவேண்டியதன் அவசியம் கருதி 32 எண்ணிக்கை பணியாளர்களை ஒப்பந்த நிறுவனம் மூலம் (டெண்டர்) ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தவும் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3391/2023/ஈ1 நாள்: 09.06.2023 ஆம் தேதிய உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதமான நாள் ஒன்றுக்கு ரூ.490/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் (EPF-13%) நாள் ஒன்றுக்கு ரூ.554/-வீதம் 32 நபர்களுக்கு ஒரு மாத கால ஊதியம் **ரூ.5,31,840/-**ஆகும். எனவே டெங்கு தடுப்பு பணி மேற்கொள்ள 01.09.2023 முதல் 29.02.2023 வரை 6 மாதங்களுக்கு உத்தேச செலவீனத்தொகை **ரூ.31,91,040/-**ஆகும். எனவே பொதுசுகாதாரப்பிரிவில் அவசர அவசியம் கருதி ஒப்பந்தபுள்ளி கோரி பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் செலவீனத்தொகை நகராட்சி பொதுநிதியிலிருந்து 2023-2024ன் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. மேலும் ஒப்பந்தபுள்ளி கோரும் வரை ஏற்கனவே உள்ள அன்னை மகளிர் சுய உதவி குழு மூலம் பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் செலவீனத்தொகை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2612/2020/எச்1 | தீர்மான எண்-993<br>நாள்.30.08.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

**பொருள் எண்-5**

சீர்காழி நகராட்சியில் நுண்ணுயிர் உரக்கிடங்கில் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவு பொருட்களை அரியலூர் லாரி மூலம் எடுத்து செல்வதற்கு ஒரு நடைக்கு குறைந்தபட்சம் **ரூ.15,000** செலவிட வேண்டியுள்ளது. மேற்படி உரக்கிடங்கில் பிளாஸ்டிக் கழிவுகள் அதிக அளவில் தேங்கியுள்ளதால் அவ்வொப்பொழுது அப்புறப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே மேற்காணும் செலவீனம் மேற்கொள்ள **ரூ.50,000/-**க்கு பொதுநிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெற ஆணையர் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:**</u> மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 1904/2023/எச்1.

தீர்மான எண்-994
நாள்.30.08.2023
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்-6**

சீர்காழி நகராட்சி அலுவலக வளாகம் கோவில்பத்து துறையூர் பனமங்கலம் வ ஊ சி நகர் ஆகிய பகுதிகளில் ( குடிநீர் வினியோகம் ) மோட்டார் இயக்குதல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை வழங்குதல் பணிக்கு 18.07.2023 அன்று மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டைவிட |
|---|---|---|
| 1 | திருமதி.T.ஜீவா, ஒப்பந்ததாரர் திருமஞ்சன வீதி,சீர்காழி. | (-) 0.02% குறைவு |
| 2 | திரு.K.செல்வம் ஊழியன்காரன் தோப்பு சீர்காழி | (+) 0.17% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u> : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக (-) 0.02 % கொடுத்துள்ள திருமதி.T.ஜீவா, திருமஞ்சன வீதி, சீர்காழி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மேலும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றதலைவரின் முன் அனுமதிப்பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கிகரிக்கலாம்.

ந.க.எண்.568/2022/இ1

தீர்மான எண்-995
நாள்.30.08.2023
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்-7**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சீர்காழி நகராட்சிக்கு பல்வேறு திட்டபணிகள் மேற்கொள்ள ரூ.16.18 கோடி வழங்கியதை தொடர்ந்து, நன்றி தெரிவித்தும் திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மண்டலத்தில் பல்வேறு திட்டப்பணிகளை துவக்கி வைத்து விருதுகள் வழங்கும் அரசு விழாவிற்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் செய்திதாள்களில் விளம்பரம் செய்ததிற்கான பட்டியல் கீழ்கண்ட விவரப்படி பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | செய்திதாள ் பெயர் | விளம்பரம் செய்யப்பட்ட நாள் | ரசீது எண் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | மாலை முரசு | 26.07.2023 | TM/23-24/AD00922 | 19688/– |
| 2 | தினகரன் | 27.07.2023 | 3300434398 | 97440/– |
| 3 | தினத்தந்தி | 27.07.2023 | 2324TNJ271021541 | 41475/– |
| 4 | தினத்தந்தி (திருச்சி ) | 27.07.2023 | 2324TNJ271021542 | 42000/– |
| 5 | தினமலர் | 27.07.2023 | 249 | 60900/– |
| 6 | தினமணி | 27.07.2023 | TNI1313643 | 34860/– |
| மொத்தம் | | | | 2,96,363 |

தீர்மான எண்-996
நாள்.30.08.2023
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | மேற்படி, பட்டியல் தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 676/2022 / இ1 | |

நாள்: **26-08-2023**
இடம்: சீர்காழி

நகர்மன்றத் தலைவர்,
சீர்காழி நகராட்சி.